NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

பனம் பொருள்
அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
ஜோ எகட்டன்
யாழ் பீச் இன்சில்
வழங்குகின்றார்
விபரம் அறிய உன்னூர்
புதினப் பத்திரிகையை
அறியுங்கள்.
'செனித்' Ads

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பனம் பொருள்
அபிவிருத்திச் சபையின்
அனுசரணையுடன்
ஜோ எகட்டன்
யாழ் பீச் இன்சில்
வழங்குகின்றார்
விபரம் அறிய உன்னூர்
புதினப் பத்திரிகைகளை
அறியுங்கள்.
'செனித்' Ads

ஏடு - 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ ஆவணி மீ 6 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 15 (22-08-1986) UTHAYAN A LIVELY T MIL DAILY சுடர் - 237

அரசிடமிருந்து தெளிவான திட்டம் இன்னும் இல்லை

கூட்டணியினர் பயணம் புதன்வரை தள்ளிப் போடப்படும்

— உதயன் அரசியல் செய்தியாளர் —

கொழும்பு, ஆகஸ்ட் 22

காணி, சட்டம்-ஒழுங்கு நிறைவேற்று, சட்டவாக்க அதிகாரங்கள், தமிழ் மொழிப் பிராந்தியம் முதலியன குறித்து இலங்கை அரசு தெளிவாகத் தனது நிலையை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் இன்னும் எடுத்துக் கூறவில்லை.

நேற்றுக் காலையும் மாலையும் நடந்த பேச்சுக்களின் போதும் இலங்கை அரசுக் குழு மேற்கண்ட விஷயங்களில் திட்டவட்டமான நிலையைக் கூட்டணிக்கு எடுத்துக் கூறத் தவறிவிட்டது

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன

இலங்கை அரசின் திட்டவட்டமான நிலையை அறிந்து கொள்வதற்காக கூட்டணித் தலைவர்கள் குழு சென்னை திரும்புவதை அடுத்த புதன் அல்லது வியாழன் வரை தள்ளிப் போட்டுள்ளது

இதே வேளை —

இலங்கை அரசின் திட்டவட்டமான நிலைமையை அறிந்து கொள்ளாமல் நாம் சென்னை திரும்பிச் செல்வதில் எதுவித பயனுமில்லை. எந்த ஒரு விஷயத்திலும் உடன்பாடு காணப்படவில்லை. இந்த நிலையில் பேச்சுக்களில் முன்னேற்றம் இருப்பதாகக் கூற முடியுமா? — என்று கூட்டணிப் பிரமுகர் ஒருவர் கேட்டார்.

நாம் சென்னை திரும்புவதற்கு முன்னர் இலங்கை அரசின் சரியான நிலையை அறிந்து கொள்ளவே முயற்சித்து வருகின்றோம். அக்காரணமாகவே பேச்சுக்களில் கலந்துகொண்டு வருகிறோம் — என்றும் அந்தப் பிரமுகர் மேலும் சொன்னார்.

நேற்று மீண்டும் அரச கூட்டணிப் பேச்சுக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

செய்திச் சாரம்

காயமடைந்த சிறுவனும் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 21

புதன்கிழமை யாழ் கோட்டையில் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் காயமடைந்த இரண்டு வயதுச் சிறுவன் ஒருவரும் நேற்று மரணமானார்.

இவரின் பெயர் பாலசுப்பிரமணியம் மிதுனன். கொட்டடி "கேன் காமன்ஸ்" முன்னால் விழுந்து வெடித்த ஷெல் குண்டே சிறுவனைப் பலி கொண்டது.

பிரேத பரிசோதனை நேற்று நடத்தப்பட்டது. சிறுவனுடன் சேர்ந்து ஷெல் தாக்குதலில் இறந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது (இ-10

பண்ணையில் பொலிஸார் ஒருவர் காயம்

கொழும்பு, ஆக. 22

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் பண்ணை பொலிஸ் விடுதி சேதமடைந்தது. ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் காயமடைந்தார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஐ எ)

சினிமாவுக்கு திரும்பும் ரி.பி

கொழும்பு, ஆக. 22

மீண்டும் திரைப்படத் துறையில் இறங்க இலங்கை மக்கள் கட்சியின் முன்னாள் தலைவர் திரு ரீ. பி. இலங்கரத்தின தீர்மானித்துள்ளார்.

அரசியலில் இருந்து ஒதுங்க நான் முடிவு கட்டிவிட்டேன் என்றும் திரு. இலங்கரத்தின தெரிவித்தார். (உ-ஐ-எ)

அகதிகள் புனர்வாழ்வு அதிகாரி

யாழ்ப்பாணம், ஆக. 22

யாழ் உணவுத் திணைக்கள கணக்காளர் திரு. ரீ. இராஜநாயகம் அகதிகள் புனர்வாழ்வு தொடர்பு அதிகாரியாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் நியமிக்கப்பட்டார்.

வெளி மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகள் தமது குறைகளையிட்டு அவருடன் தொடர்பு கொள்ளலாம் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார் (இ-5)

மண்ணில் புதைந்த ஷெல்

பலாலி, ஆக. 22

கடந்த செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று மண்டான் பகுதியில் உள்ள வீடொன்றில் விழுந்து வெடிக்காமல் மண்ணில் புதைந்தது.

மண்டானிலுள்ள திரு. சாமி செல்லத்தம்பி என்பவரது வீட்டில் விழுந்து புதைந்து கிடந்த இந்தக் குண்டை போராளிகள் மீட்டுச் சென்றதாக அறியவருகின்றது. (உ-119)

லொறி மோதி மரணம்

கைதடி, ஆக. 22

கோப்பாய் — கைதடி வீதியில் முதலியார் கோவிலடியில் நேற்று ஒருவர் லொறியால் மோதுண்டு இறந்தார்.

மூன்று பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் நாவற்குழியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவரத்தினம் (வயது 33) என அடையாளம் காணப்பட்டது.

யாழ் பெரியாஸ்பத்திரியில் அட்டெண்டனாக கடமை ஆற்றி வந்தார். (இ-74)

புதன் நள்ளிரவுத் தாக்குதலில் இருவர் காயம்

யாழ்ப்பாண , ஆக. 22

புதன்கிழமை நள்ளிரவும் யாழ் கோட்டை முகாமில் இருந்து பயங்கர ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் இரண்டு பேர் காயமடைந்தனர்

நள்ளிரவு 12 15 மணியளவில் தாக்குதல்கள் ஆரம்பமாகின

ஷெல்கள் கொட்டடிப் பக்கமாகவும் கே கே எஸ், வீதி சிவப்பிரகாசம் வீதிப் பக்கமாகவும் விழுந்து வெடித்தன.

சிவப்பிரகாசம் வீதியில் விழுந்த ஷெல் குண்டினால் இருவர் காயமடைந்ததுடன் தென்னை மரம் ஒன்றும், மின்சாரக் கம்பமும் முறிந்தன.

மின்வயர்களும் அறுந்து வீழ்ந்தன

கே. கே எஸ் வீதியில் வீழ்ந்த ஷெல் குண்டினால் 2 நாயும் காகங்களும் இறந்தன.

இத் தாக்குதலின் போது காயமடைந்த இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்

ஏ. கே கந்தசாமி 49 வயது) வண்ணார்பண்ணை. இவருக்குக் காலில் காயம் ஏற்பட்டுள்ளது

எம் மகாதேவா (31 வயது) சண்டிலிப்பாய் (இ-10)

வயாவிளானில் ஹெலி தாக்குதல்

பலாலி, ஆக. 22

நீண்ட நாளின் இடைவெளிக்குப்பின் வயாவிளான் பகுதியில் நேற்று ஹெலிக் கொப்டரிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

தாழ்ந்து பறந்த ஹெலிக்கொப்டரை நேற்றுக் காலை 7 30 மணியளவில் போராளிகள் மோட்டார் தாக்குதலைத் தொடர்ந்தனர்". அதனையடுத்து திடீரென உயர எழுந்த ஹெலிக்கொப்டர் சுமார் அரைமணி நேரம் அப்பகுதியைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டவாறு வேட்டுக்களை தீர்த்தது.

குரும்பசிட்டி, வடக்கு புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதனால் குப்பிளான், குரும்பசிட்டி, திடற்புலம், ஒட்டகப்புலம், வயாவிளான், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது (உ-119)

முச்சந்தி முனி

அப்பு என்ன பாட்டி கதை கதைக்கவே இரண்டு பக்கத்தாரும் பண்டாரநாயக்கா மண்டபத்தில கூடுறவை எப்ப எல்லாம் திட்டவட்டமாகப் பேசுறது . . ?

சுபநேரம்

22 08 - 1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:- 6.05 முதல் 7 35 வரை
ராகுகாலம்: 10.35 முதல் 12 05வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இன்று நல்லூரில்

மகோற்சவம்

13 ஆம் திருவிழா
காலை 10 மணிக்கு வெள்ளி மயில், வெள்ளி அன்னம் (உள்வீதி)
மாலை 5 மணிக்கு-காராம் பசு இடபம் (இரண்டு) (வெளிவீதி)

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்து வரும் தொடர் சொற்பொழிவில் 'பாடும்பணி' என்னும் பொருள் பற்றி ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா முத்தையா அவர்கள் சொற்பெருக்காற்றுவார்.

மாலை 6 30 மணிக்கு ஆலய மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோயில் மண்டபத்தில் திரு. வை. நித்தியானந்தசர்மா அவர்களால் முருகோதயம்' என்ற தொடரில் கதாப்பிரசங்கம் நடைபெறும்

பருத்தித்துறையில் 8 சிப்பாய்கள் பலி

ஈ. பி. ஆர் எல். எப். அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 22

பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்ற மோதல்களில் எட்டுப் பேர் சிப்பாய்களும் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த இருவரும் கொல்லப்பட்டனர் என ஈ பி ஆர் எல் எவ். வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அறிக்கை விவரம் வருமாறு:

நேற்று வியாழக்கிழமை பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் வெளியேற முற்பட்டனர்.

அவர்களை முன்னேறவிடாது மக்கள் விடுதலைப் படை வீரர்கள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகில் மக்கள் விடுதலைப் படை வீரர்களுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே நடைபெற்ற நேரடி மோதலில் 8 க்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

மக்கள் விடுதலைப் படையினர் எதிர்த்தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் முகாமை நோக்கிப் பின் வாங்கிய சிப்பாய்கள் முகாமில் இருந்து ஷெல் தாக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

சம்பவம் பற்றி புலிகள்

யாழ்ப்பாணம், ஆக. 22

பருத்தித்துறையில் நேற்று நடந்த சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு:-

நேற்று நண்பகல் 1 30 மணியளவில் பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து பெரும் எண்ணிக்கையில் சிப்பாய்கள் வெளியேறினர்

கல்லூரி வீதி வழியாக முன்னேறிய சிப்பாய்கள் எதிர்ப்பட்ட இரு சக இயக்கப் போராளிகளைச் சுட்டதன் தொடர்ச்சி

(4 ஆம் பக்கம் பார்க்க

வெங்கடேஸ் அளித்த உறுதிமொழி

புதுடில்லி, ஆக 22

போராளிகளின் கருத்துக்களைக் கணக்கில் கொள்ளாது இந்தியா எந்த முடிவுகளையும் எடுக்காது என்று இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு ஏ பி. வெங்கடேஸ்வரன், போராளித் தலைவர்களுக்கு உறுதியளித்தார். (உ-ஐ-எ)

வெலிக்கடையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இன்ஸ்பெக்டர் தீபனை நீதிமன்றத்திற்குக் கொண்டுவருக

மனைவியின் சார்பில் ஆட்கொணர்வு மனு

கொழும்பு, ஆக. 22

வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்தபோது கைது செய்யப்பட்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் சேமண்ட் தவராஜதீபனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்று கோரும் ஆட்கொணர்வு மனு ஒன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது

மானிப்பாய், மெமோரியல் ஒழுங்கையிலுள்ள எனின் குழந்தைகள் இல்லத்தில் வசிக்கும் திரு தவராஜதீபனின் மனைவியான [illegible] பிரபாஷினி இம்மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்.

அவரது மனுவில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி, பொலிஸ்மா அதிபர், சிறைச்சாலைகள் அத்தியட்சகர், சட்டமா அதிபர் ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் கூறப்பட்டிருப்பதாவது;

எனது கணவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கைது செய்யப்பட்ட காலத்தில் வாழைச்சேனை பொலிஸ் அதிபராக இருந்தார்

கொழும்பு இரகசியப் பொலிஸ் திணைக்களத்துக்கு வரும்படி 1985 மே மாதம் 2ஆம் திகதி அவர் அழைக்கப்பட்டிருந்தார் அதன்படி அவர் இரகசியப் பொலிஸ் பிரிவுக்குச் சென்றார்.

அங்கு அவர் கைது செய்யப்பட்டு மே 14

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள், ரெலோ, புளொட் இடையில் சமரச முயற்சி

ஈரோஸ் பிரமுகர்கள் ஈடுபட்டனர்

புதுடில்லி ஆக 21

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய மூன்றுக்கும் இடையே கருத்து உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும் தூதர்களாக ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு பாலகுமார், திரு இரத்தினசபாபதி ஆகியோர் பணியாற்றினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

புதுடில்லிக்குச் சென்றிருந்த சமயம் இவர்கள் அனைவரும் ஒரே ஹோட்டலில் தங்கியிருந்தனர். அப்போதே இந்த சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவாம்

இதனிடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் உமாமகேஸ்வரனும் விரைவில் சந்திப்பார்கள் என்று பி ரி ஐ செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது (உ-ஐ-எ)

போராளிகளுக்கு இந்திய அமைச்சர் எச்சரிக்கை விடுத்தார்

லண்டன் ஆக 21

கொழும்பில் இலங்கை அரசுக்கும்—தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையில் நடைபெறும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் தமிழ் போராளிகள் [illegible] செயல்படக்கூடாது

போராளிகள் தலைவர்களைச் சென்னையில் சந்தித்த மத்திய அமைச்சர் குழு இப்படி எச்சரிக்கை விடுத்ததாக பி பி சி அறிவித்தது.

இந்த எச்சரிக்கையை மீறினால் போராளிக் குழுக்கள் தமிழ் நாட்டில் தொடர்ந்து தங்கி பணிபுரிவதற்கான [illegible] வைத்திருக்கும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் அவர்கள் தெரிவித்ததாகவும் பி பி சி அறிவித்தது.

எனினும் மத்திய அமைச்சர் குழுவுடனான சந்திப்புக் குறித்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் வேறு விதமாகக் கருத்து வெளியிட்டார்.

தமிழ் மக்களின் குறிக்கோளை பிரதிபலிக்கத்தக்க வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி இயங்கவில்லை ஆகவே இலங்கைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள் செயற்பட முடியாது என்பதை போரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

புதுடில்லியிலிருந்து சென்னைக்கு

போராளிகளுடன் பேசுவதற்கு நள்ளிரவில் புறப்பட்ட மத்திய அரசு அமைச்சர் குழு

சென்னை, ஆகஸ்ட் 22

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு பி. சிவ் சங்கர் தலைமையிலான மூன்று மத்திய அமைச்சர்கள் குழு நேற்றுக் (வியாழன்) காலை தமிழ்ப் போராளிக் குழுக்களின் தலைவர்களுடனும் தமிழக முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரனுடனும் பேச்சுக்கள் நடத்தியது.

மத்திய அமைச்சர்களான உள்துறை அமைச்சர் திரு. பூட்டாசிங், இணை பந்தோபஸ்து அமைச்சர் ப. சிதம்பரம் ஆகியோரே பேச்சுக்களில் கலந்துகொண்ட ஏனைய அமைச்சர்கள் ஆவர்

போராளித் தலைவர்களினால் மத்திய அமைச்சர்களை புதுடில்லியில் வைத்துச் சந்திக்க முடியாமற் போனமையினாலேயே தான், அமைச்சர் குழு நேற்று முன்தினம் (புதன்) நள்ளிரவில் புதுடில்லியில் இருந்து புறப்பட்டு சென்னை வந்தது என்று அறிவிக்கப்பட்டது.

பேச்சுக்களின் போது முதலமைச்சருக்கு உதவியாக மின் அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன் இருந்தார்

இந்திரா காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு ஜி கே மூப்பனாரும் பேச்சுக்களின் போது கலந்து கொண்டார்.

புதுடில்லி திரும்பும் முன்னர் சென்னை விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர்களுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் பி சிவ்சங்கர் பேசினார்

போராளித் தலைவர்களுடனும் முதலமைச்சருடனும் பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையில் நல்ல வாய்ப்புக்கள் தோன்றியுள்ளன என்று அச்சமயம் அமைச்சர் சிவ்சங்கர் சொன்னார்.

பேச்சுவார்த்தைகள் பொதுப்படையாக நடைபெற்றன திட்டவட்டமாக ஒன்றும் எடுக்கப்படவில்லை என்று போராளிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஆ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

நோயாள சிறுவர்களுக்கு விளையாட்டுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஆக 22

யாழ். பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள், வர்ணப்படங்கள், புத்தகங்கள் வழங்கும் திட்டம் ஒன்றை யாழ் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் வகுத்துள்ளது.

இத்திட்டத்துக்கு உதவி புரிய விரும்புவோர் புதிய பொருள்களையோ, தங்கள் சிறுவர்கள் பாவித்த நல்ல நிலையில் இருக்கும் பொருள்களையோ சங்கத்திடம் ஒப்படைக்குமாறு அதன் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-10)

நிவாரண உதவி இன்றி செட்டிகுள அகதிகள்

யாழ்ப்பாணம், ஆக 22

செட்டிகுளப் பகுதியிலிருந்து அகதிகளாக வெளியேறி, மீண்டும் செட்டிகுளத்துக்குத் திரும்பி மீளக் குடியேறியவர்களுக்கு அரசு வழங்கிய உத்தரவாதப்படி எவ்வித நிவாரண உதவியும் வழங்கப்படவில்லை.

பிரசைகள் ஒன்றியக் குழுப் பிரமுகர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அகதிகள் மார்ச் 5ஆம் திகதிக்கு பின் வவுனியாவுக்கு இடம் பெயர்ந்திருந்தனர்.

இவர்களுக்கு 3 மாத நிவாரண உதவிமட்டுமே வழங்கப்பட்டது.

இவர்களுக்கு தொடர்ந்து உதவி மறுக்கப்பட்டு மீண்டும் செட்டிகுளம் செல்ல நிர்ப்பந்திக்கப் பட்டனர்.

வெளி மாவட்டங்களில் எந்தவித உறவுகளுமில்லாத 52 குடும்பங்கள் தங்கி இயலாமை காரணமாக மீண்டும் செட்டிகுளம் சென்று மீளக் குடியேறினர்.

இவர்களில் 11 பேரே பாவற்குளம் அசம்பாவிதத்தில் பலியானவர்கள். மீளக் குடியேறிய இவர்களுக்கு அரசு வாக்களித்தபடி எந்தவித உதவிப் பணமும் வழங்கப் படவில்லை.

மேலும் இவர்களுக்கு பயிர்செய்வதற்கு உழக்கமாக அரசு அளித்துவந்த கச்சான், பயறு, உழுந்து விதைகளும் வழங்கப்படவில்லை

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

அந்நிய சக்திகள் ஊடுருவல் குற்றச்சாட்டு:

மருத்துவ மாணவர் ஒன்றியம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 22

பல்கலைக்கழக மாணவர் மத்தியில் சில அந்நிய சக்திகள் ஊடுருவியுள்ளன என்று பொறுப்புள்ள மக்கள் குழு ஒன்று அறிக்கை வெளியிட்டதை யாழ் பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.

குறிப்பிட்ட மக்கள் குழு வெளியிட்ட அறிக்கை மாணவர் மத்தியில் குழப்ப நிலைமை, சந்தேக மனப்பான்மை, ஒற்றுமையைக் குலைக்கும் நடவடிக்கை ஆகியவற்றைத் தூண்டி விடுவதாக அமைந்துள்ளது.

பொறுப்பு வாய்ந்த அமைப்புக்கள் தகுந்த ஆதாரங்களுடன் அறிக்கை வெளியிட வேண்டும்.

இப்படி மருத்துவ மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

ராகிங் தொடர்பான சம்பவங்கள் குறித்து மருத்துவ மாணவர் ஒன்றியம் இந்த அறிக்கையை வெளியிட்டது.

ராகிங் எனப்படுவது புதிய மாணவருக்கு உடலியல் அல்லது உளவியல் ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படுவது அல்ல. ஆனால் அதைத் துர்ப்பிரயோகம் செய்ய சில மாணவர்கள் எப்போதாவது முயற்சித்தால் அது கண்டிக்கப்பட வேண்டும் இது குறித்து எந்தவித ஐயப்பாடும் இல்லை

இதைத் தவிர்ப்பதில் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் பூரண ஆதரவு வழங்கி வந்துள்ளன

இது விடயத்தில் அவசரப்பட்டு எடுக்கும் தீர்வுகள் எந்தவொரு நிரந்தர தீர்வுக்கும் வழிவகுக்காது.

பல்கலைக்கழக அறிமுக வாரம் மூலமே பல்கலைக்கழகத்தினுள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று எமது ஒன்றியம் ஏப்ரலிலும் ஜூனிலும் நிர்வாகத்தைக் கேட்டிருந்தது

'ராகிங்' சம்பந்தமான பிரச்சினையை அடுத்தே இக்கோரிக்கை விடுக்கப் பட்டது என்பது தவறானது

இப்படி மருத்துவ மாணவர் ஒன்றியம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது (இ-எ)

காவலூர் தொகுதிக்கு ரூ. 17 லட்சம் ஒதுக்கீடு

மண்டைதீவு, ஆக 22

காவலூர்தொகுதிக்கு, 1987ஆம் ஆண்டு, 17லட்சம் ரூபா, பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது

இந்த நிதி இப்பகுதி உப அலுவலகங்களின் வேலைத்திட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் மண்டைதீவு உப அலுவலகத்தில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில் அதிகாரம் அளிக்கப் பட்ட உத்தியோகத்தர் திரு டி. பூபாலரத்தினம் இவ்வாறு கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; மிகவும் பின்தங்கிய இடமான இப்பகுதிக்கு இந்த பணம் அபிவிருத்தி வேலைகளுக்கு போதாத போதிலும் மிகவும் அவசரமான வேலைகளை உடன் செய்வதற்கு பயன்படும்.

இப்பகுதிகளில் பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஒப்பந்த அடிப்படையில் இந்த வேலைத் திட்டங்களைச் செய்ய வேண்டும் என்றார். (இ-88)

ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு:
1930
—
06
—
13

உதிர்வு:
1985
—
08
—
22

முல்லை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும்,
முன்னாள் கிராம சேவையாளரும்,
புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியரும்,
கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமாகிய

உயர்திரு. கா. தம்பாபிள்ளை (J.P.) அவர்கள்

குலவிளக்காய் கூடிநின்று குதூகலத்தை எமக்களித்தாய்
குமுறும் வெள்ளத்திலே மூழ்கவிட்டு சென்றுவிட்டாய்
தமிழுக்காக தலைநிமிர்ந்து பலகாலம் பாடுபட்டாய்
தவிக்கும் வெள்ளத்திலே தாழவிட்டு சென்றுவிட்டாய்
அடியார்கள் அனைவரையும் அன்பாக அணைத்திருந்தாய்
ஆற்றொணாக் கடலினிலே அலையவிட்டு சென்றுவிட்டாய்
எளிமையான முறையினிலே ஏழைகட்கு உதவி நின்றாய்
எம்மையெல்லாம் ஏங்கவிட்டு எங்கே நீ சென்றுவிட்டாய்!
ஒரு வருடம் போனாலும் ஓயவில்லை உன் கவலை
கண்ணிலே நித்தம் அது காட்சியாகத் தெரியுதையா.

உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

உங்கள் பிரிவால் வாடும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்.

குறிப்பு: 10-9-86இல் நடைபெறவுள்ள ஓராண்டுத் திவசத்தின் மதிய வேளையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

சந்தைக்கட்டட வேலை ஆரம்பம்

கொடிகாமம், ஆக 22

கடந்த ஒன்பது வருடங்களாக ஸ்தம்பித்திருந்த கொடிகாமம் மத்திய சந்தைக் கட்டட வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன (இ-76)

தமிழ் மக்கள் மீது இராணுவ தாக்குதல்

இணைப்புக்குழு முறையீடு

யாழ்ப்பாணம், ஆக 22

ஆண், பெண், குழந்தை என்ற பேதமின்றி அப்பாவித் தமிழ் மக்கள் மீதான இராணுவத்தின் மனிதத் தன்மையற்ற தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

—இப்படி பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளது

ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் அதிகரித்து வரும் வன்செயல்கள் பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அப்பாவித் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் இன்னல்கள் பற்றியும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் இராணுவ, கடற்படை முகாம்களில் இருந்து மோட்டார், மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன

ஆயுதப் படையினரின் அத்துமீறல்கள் குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

—இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது. (உ-எ-5)

ரொனி சொல்கிறார்

சமாதானப் பேச்சு வெற்றியளிக்காவிடில் நாட்டில் இரத்த ஆறு

கொழும்பு, ஆக. 22

சமாதான யோசனைகள் -பேச்சுக்கள் வெற்றி அளிக்காவிட்டால் நிச்சயமாக நாடு முழுவதிலும் இரத்த ஆறு ஓடும்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டாலும் நாட்டில் இரத்த வெள்ளம் ஏற்படும். இப்போது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மட்டும்தான் இரத்த ஆறு ஓடுகிறது.

இப்படி நிதி அமைச்சர் ரொனி டி மெல் சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

மாகாண சபை மூலம் நாடு பிரிவுபடாது இனப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் உதவிகள் குறைக்கப்படும் என்று உதவும் நாடுகள் எச்சரித்துள்ளன.

இனப்பிரச்சினை காரணமாக 1983க்குப் பின்னர் நாட்டில் 5,000 பேருக்கு மேல் இறந்து விட்டனர். நினைக்கமுடியாத அளவு பொருளாதார சேதமும் ஏற்பட்டுவிட்டது

இப்படி அவர் சொல்லி முடித்தார். (ஆ-எ)

இலக்கியத் துறையில் மட்டுமன்றி மாணவர் கல்விக்கும் பாடுபட்ட அதிபர்

சேவைநலன் பாராட்டு விழாவில் உரை

கரவெட்டி, ஆக. 22

தமிழ் இலக்கியத் துறைக்கு மாத்திரமன்றி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் பாடுபட்ட அதிபர் திரு கந்தப்புவின் சேவை பாராட்டுதற்குரியது.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியசாலை அதிபராக இருந்து இளைப்பாறிய திரு. மு. கந்தப்புவின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

அதில் உரை நிகழ்த்திய உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈஸ்வரபாதம் மேற்கண்டவாறு கூறினர்.

வித்தியாலய புதிய அதிபர் திரு. பொ. பாலச்சந்திரன் தலைமை வகித்தார்.

திரு. ஈஸ்வரபாதம் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்

30 வருடங்கள் ஆசிரிய பணிபுரிந்த அதிபர் கந்தப்பு இவ்வித்தியாலயத்தில் ஆறு ஆண்டு காலம் பதவிவகித்த காலத்தில் வித்தியாலயத்தின் கல்வித் தரத்தை வெகுவாக உயர்த்தியுள்ளார் என்றார்.

இலங்கை ஆசிரிய சங்கக் கிளைச் செயலாளர் திரு. கா. சிவஞானம், ஆசிரியர் திரு. பொ. முருகேசு திரு மு. இல்லைநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-5)

செய்திக்கொத்து

வைத்தியசாலை கட்டடம் திருத்தியமைப்பு

பூநகரி, ஆக 22

பூநகரி ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டடம் திருத்தப்படுகின்றது

பூநகரி பிரதேச சனசமூக ஒன்றியத்தின் தலைவர் திரு இ. அசோகரத்தினம் பூநகரி பிரதேச சர்வோதயப் பொறுப்பாளர் திரு செல்வராசா, வர்த்தகர் திரு கா. பஞ்சாட்சரம் ஆகியோர் பொதுமக்களின் நிதி உதவியுடன் திருத்த வேலைகளை ஆரம்பித்தனர். (இ-எ-124)

மண்டபம் திறந்து வைக்கப்பட்டது

பருத்தித்துறை மேற்கில் உள்ள வெற்றிலைக்கேணி என்னுமிடத்தில் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் இம்மண்டபத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். (உ-144)

உற்சவம் இல்லை

கிளிநொச்சி, ஆக 22

கடந்த ஜூன் மாதம் முதல் கிளிநொச்சியில் நிகழ்ந்துவரும் அசம்பாவிதங்களினால் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் பூசை வழிபாடுகள் யாவும் தடைப்பட்டிருக்கின்றன,

தற்போதைய சூழ்நிலை காரணமாக வருடாந்த உற்சவமும் நடைபெறாது தடைப்பட்டுள்ளது.

இவ்வாலயம் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரசித்திபெற்ற ஆலயங்களுள் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது (உ-76)

போதியளவு மருந்து கையிருப்பில்

யாழ்ப்பாணம், ஆக 22

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் மருந்து தட்டுப்பாடு இல்லை

போதியளவு மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகவும் —

தேவையான வைத்தியசாலைகள், பொது ஸ்தாபனங்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும்படியும் மேற்படி பகுதிகளுக்கான வைத்திய அட்சகர் திரு எஸ். மாணிக்கம் கேட்டிருக்கிறார். (உ-5)

பயிற்சி வகுப்பு

கரவெட்டி, ஆக 22

கரவெட்டி, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் பாவலையாளர்சங்க உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்றை யாழ்ப்பாண உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம் இம்மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை நடத்துகின்றது.

மந்திகை தமிழ்க்கலவன் பாடசாலையில்நடைபெறவுள்ள இக்கருத்தரங்கை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆர். ஐயாத்துரை, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வி. வேலும்மயிலும் ஆகியோர் ஆரம்பித்து வைப்பர் (உ-20)

பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக 22

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைநடைபெறும்.

கல்லூரிக் கட்டடம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டதைத் தொடர்ந்து புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்தவித்தியாலயம் தற்காலிகமாக இடம்மாற்றப்பட்டு இயங்கிவருகிறது.

சகல பழைய மாணவர்களையும் ஆயாக்கடவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் 24ஆம் திகதிகாலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார் (உ-5)

சட்டவிரோத மின்இணைப்பு காவலூரில் இல்லை

ஊர்காவற்றுறை, ஆக. 22

யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் ஊர்காவற்றுறை பட்டின அலுவலக எல்லைக்குள் சட்ட விரோத மின் இணைப்புக்கள் எதுவுமே இல்லாதது அவதானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அண்மையில் நடத்திய மகாநாடு ஒன்றிலேயே இத்தகவல் வெளியானது

இவ்வலுவலகத்தின் மின்சாரத்திட்டத்தில் மிகக் குறைந்தளவு நஷ்டம் ஏற்படுவது இலங்கையின் சாரசபையின் கட்டண விகிதத்தினாலேயே என்பதும் அங்கு தெரிவிக்கப்பட்டது (உ-16)

பண்டத்தரிப்பு

ப. நோ. கூ. சங்க உறுப்பினர் மர்மம் நீடிப்பு

பண்டத்தரிப்பு, ஆக 22

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர் ஒருவர் பற்றிய மர்மம் தொடர்கிறது

கடந்த மே மாதத்தின் பின் இவர் இயக்குநர் சபை கூட்டங்களுக்கோ சங்கப் பக்கமோ தலை காட்டுவதில்லை. இதன் காரணமாக பலரும் பல காரணப் பேசிக் கொள்கின்றனர்.

சங்கத்தலைவரும் இயக்குநர் சபைக் கூட்டங்களுக்கு சிலருக்கு அழைப்புகள் அனுப்பியும்பதில் இல்லை என்று கூறப்படுகிறது

இவர் ஊழியராகப் பணியாற்றும் மற்றொரு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும் செல்வதில்லையாம்.

பலமாதங்கள் சங்க அலுவல்கள் பற்றிய கூட்டங்களுக்கு இவர் சமுகம் கொடுக்காமையால் இவரது இடத்திற்கு இன்னொருவரை தெரிவதற்கும் முடியாதிருக்கிறதாம்'

இவரது இராஜினாமா கடிதம் கிடையாததே இதற்கு காரணம். (இ-120)

யாழ் மாவட்டத்திற்கு தேவையான

கயிறு தயாரிப்பதில் அடுத்த ஆண்டு தன்னிறைவு

யாழ்ப்பாணம், ஆக 22

அடுத்த ஆண்டில் யாழ்மாவட்டத்தில் கயிறு தயாரிப்பில் சுயதேவையை பூர்த்தி செய்வோம் என்று மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி கே. எஸ். கார்த்திக் தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற சேவைகள் பற்றிய பத்திரிகையாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்

இச் சந்திப்பில் வடபிரதேச உதவி இயக்குனர் திரு. ஏ. நாகேந்திரனும் கலந்து கொண்டார்

அடுத்த ஆண்டில் பனம் சீனி தயாரித்தல், கயிறு திரித்தல் என்பன கிராம ரீதியாக பயிற்றுவிக்கப்படவுள்ளன.

இன்று கொழும்பிலிருந்து கயிறு கொண்டு வர வேண்டியுள்ளது.

அச்சுவேலியில் அரச அதிபரால் ஒதுக்கப்பட்ட 8 ஏக்கர் காணியில் 15 ஆயிரம் தென்னம் விதை நாற்றுக்கள் நடப்பட்டிருக்கின்றன

இத்திட்டத்திற்கு பன்முக வரவு செலவு திட்டத்திலிருந்து 4 லட்சம் ரூபாவை அரச அதிபர் ஒதுக்கித் தந்துள்ளார்.

முன்னர் திறந்தவெளி சிறைச்சாலை இயங்கிய உரும்பராயில் இளைஞர் நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இளைஞர்களுக்கான மோட்டார் தொழில் நுட்பம், வெல்டிங் என்பன இங்கு பயிற்றுவிக்கப்படவுள்ளது— இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

கல்முனைக் கலவரத்தில் காணாமல் போன

தமிழர் குறித்து முறையீடு

கல்முனை, ஆக 22

கல்முனைக் கலவரத்தில் காணாமற்போன தமிழரின் உறவினர்கள் செவ்வாய்க்கிழமையன்று கல்முனைப் பொலீஸில் முறையிட்டனர்

சந்திவெளியைச் சேர்ந்த தமிழ்த் தொழிலாளர்கள் கல்முனையில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான அரிசி ஆலையில் வேலைசெய்து வந்தனர்.

அவர்களில் சிலரே கலவரத்தின் போது காணாமற்போனார்கள் இதனிடையில் 14 தமிழரின் சடலங்கள் கடற்கரையில் கரை ஒதுங்கின என்பது குறிப்பிடத்தக்கது. அடையாளம் காணப்படாத நிலையில் அவை அடக்கம் செய்யப்பட்டன. (உ-எ-84)

யாழ் பல்கலைக்கழக மாணவர் பாதுகாப்புக்கு நிர்வாகமே பொறுப்பு

பதில் துணைவேந்தர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஆக. 22

பல்கலைக்கழக மாணவரின் நலனுக்கும் பாதுகாப்புக்கும் நிர்வாகம் பொறுப்புடையது. மாணவர்கள் சம்பந்தப்பட்ட சகல வெளிப்பிரச்சினைகளையும் நிர்வாகத்துக்கு அறிவிப்பதன் மூலம் பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் நா. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு வாரங்களாக நடைபெற்று முடிவுக்கு வந்துள்ள பல்கலைக்கழக மாணவரின் மறியல் போராட்டத்தை யிட்டு கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் மேலும் கூறியதாவது:-

"ராக்கிங்"கை நிறுத்துவதற்கு ஒத்துழைப்புத் தருவதாக மாணவர்கள் உறுதி கூறியுள்ளார்கள்.

அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை நாம் நிறைவேற்றியுள்ளோம். அவற்றில் பல ஏற்கனவே எமது நிர்வாக சட்டதிட்டங்களுக்கு அமைவானவையாகும்.

மாணவர்கள் சம்மந்தமான சகல பிரச்சினைகளையும் மாணவர்களின் உத்தியோகபூர்வமான பிரதிநிதிகள் முன்னிலையிலேயே நிர்வாகம் விசாரிக்கும்

இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-5)

கூட்டணியினர் முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு

கொழும்பு, ஆக. 22

கிழக்கிலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி அஷ்ரப் தலைமையிலான தூதுக்குழு ஒன்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை எதிர்வரும் ஞாயிறு காலை சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த உள்ளது

இத் தூதுக்குழுவில் மட்டக்களப்பு, அம்பாறை, முஸ்லிம் பிரமுகர்கள் இடம்பெறுவர்.

வடக்கு, கிழக்கு இணைப்புடனான தீர்வு ஒன்று அரசு — கூட்டணிப் பேச்சின் முடிவில் உருவாகுமானால் அதை முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்காது என கூட்டணியிடம் தூதுக்குழு எடுத்துச் சொல்லவுள்ளது.

நிறைவேற்றுக் குழு

சாவகச்சேரி, ஆக 22

கைதடி சித்தவைத்திய பீடத்தில் இடம்பெற்ற ஆயுர்வேத மூலிகைத் தோட்ட நிர்மாணக் கருத்தரங்கில் ஏழுபேர் கொண்ட மூலிகைத் தோட்ட நிறைவேற்றுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

உற்பத்தி, ஆய்வு, விற்பனை, வெளியீட்டுத் தொடர்பு, பாதுகாப்பு இவற்றைச் செயற்படுத்த தெரிவு செய்யப்பட்ட இக்குழுவின் தலைவராக திரு வி. எஸ். துரைராசாவும் செயலாளராக திரு க. ஜீவகதாஸும் செயற்படுவர். (உ-31)

உதய சங்கற்பம்

பயனிலாப் பேசுதல் பக்தி நெறியும் தர்மமும் ஆகும்.

— நாயகம் (ஸல்)

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 22-08-86 த பெ 23

விடுதலை அமைப்புகளின் உடன்பாடு: புதிய திருப்பம்

தமிழர் தாயகத்தை மீட்டு எடுப்பதற்காக ஐந்து பிரதான தமிழ்ப் போராளிகள் அமைப்புகள், ஒன்றிணைந்து செயற்பட உடன்பாடு தெரிவித்துள்ளன.

இது இலங்கைத் தமிழர் அரசியல் பாதையில் புதிய திருப்புமுனையாக அமைந்திருக்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒரு புதிய பரிமாணம் கொடுக்கும் விதத்திலும் விடுதலை அமைப்புகளின் கருத்து உடன்பாடு அமைந்துள்ளது எனலாம்.

ஐந்து பிரதான இயக்கங்களும் ஒன்று பட்டுச் செயற்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை அதன் தலைவர்கள் உணர்ந்திருப்பது— அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்கு உரியது

அவர்கள் ஒன்றுபட்டுச் செயற்படுவதால் தமிழர்கள் தமது உரிமைப் போராட்டத்தில் பல படி முன்னேற முடியும் என்ற நம்பிக்கை பிறக்கும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு தான் வழி என்று எண்ணியிருந்த — எண்ணியிருக்கும் பலரை சமாதானத் தீர்வு குறித்து அடிக்கடி நினைக்கத் தூண்டியவை தமிழர் விடுதலை அமைப்புகள் தான் என்பதை மறுக்க முடியாது

இந்தச் சமாதான முயற்சிகள்—

இராணுவ பலத்தை அதிகரிப்பதற்கு எடுக்கப்படும் கால அவகாசம் என்றும்—

உலகத்தையும் மக்களையும் ஏமாற்றுவதற்கான செயற்பாடு என்றும் — சந்தேகப்படக் கூடியவை. அதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஏனெனில் முன்னர் ஒருமுறை ஏற்பட்ட அனுபவம் தமிழர்களுக்கு உண்டு.

எனினும் இந்தியாவின் பங்களிப்போடு இப்போது மற்றொரு தீர்வு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

அதன் ஓர் அங்கமாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தொடர்ந்தும் சந்திப்புகள் நடக்கின்றன.

அதிகாரப் பரவல் என்ற பெயரில் மாகாணசபைகளை அமைப்பதே அரசாங்கத்தின் தீர்வு. ஆனால் தமிழர் தாயகத்தைப் பேணும் விதத்தில் ஆகக் குறைந்தது தமிழ்மொழிப் பிராந்தியமாவது அமைக்க வேண்டும் என்பது கூட்டணியின் கோரிக்கை.

கூட்டணியின் அந்தக் கோரிக்கைக்கு அரசு உடன்படக் கூடிய நிலையில் இருக்கிறதா என்பது மிகச் சந்தேகம். ஏனெனில் மாகாண சபைகள் என்றதுமே இலங்கையைத் தமிழர்களுக்கு அரசு தாரை வார்க்கப்போவதாகத் தென்னிலங்கைச் சிங்கள ஆதிபத்தியவாதிகள் கூக்குரல் போடத்தொடங்கி விட்டார்கள் அவ்வாறு இருக்கும்போது தமிழ் மொழிப் பிராந்தியக் கோரிக்கைக்கு அரசு உடன்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகினுற்கூட அதனை நடைமுறைப்படுத்தச் சிங்கள ஆதிபத்திய சக்திகள் அனுமதிப்பார்களா என்பது ஐயத்துக்கு உரிய ஒன்றாகும்.

இத்தகைய சூழ்நிலையில் தமிழர் விடுதலை அமைப்புகள் தமிழர் தாயகத்தை— இலங்கைத் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை மீட்பதற்காக ஒன்று சேர்ந்து இயங்க முன்வந்திருப்பது நிச்சயம் தமிழர் அரசியலில் ஒரு புதிய பரிமாணம் என்பதை எவரும் ஒப்புக் கொள்வர்

தமிழ்மொழிப் பிராந்தியம் என்பதில் இருந்து குறைந்த தீர்வு எதனையும் தாம் ஏற்கப் போவதில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கூறிவருகிறார்கள்.

எனினும் தமிழர் விடுதலை அமைப்புகளின் ஒற்றுமை, கூட்டணியின் நிலைப்பாட்டுக்கு பலம் ஊட்டுவதாக அமைகின்றது என்றும் கொள்ளலாம்.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதுவும் விடுதலை அமைப்புகளின் ஆதரவின்றி அனுசரணையின்றி அமுலுக்கு வரமுடியாது என்பதை ஏனையோருக்கு இந்தப் புதிய திருப்பம் எடுத்துச் சொல்வதாகவும் இருக்கும்.

விடுதலை அமைப்புகள் பிளவுபட்டு நிற்பதால் அவற்றுடன் சமாதானப் பேச்சு எதையும் நடத்த முடியவில்லை என்று சம்பந்தப்பட்ட எவரும் நொண்டிச் சாட்டுக் கூறவும் இனி வாய்ப்பில்லை.

விடுதலை அமைப்புகளின் பங்களிப்பின்றி தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதையும் எட்ட முடியாது என்பதனையும் புதிய திருப்பம் மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கல்லவா? ஐந்து தமிழர் விடுதலை அமைப்புகளும் ஒன்று சேர்ந்து இயங்கினால் தமிழ் மக்களுக்கு —அவர் தம் உரிமைகளுக்குத் தக்க இடம் கிடைக்கும் அல்லவா?

இல்லாத அகதிகளுக்கு நிவாரண உதவிகள்!

[illegible] இருந்து இடம்பெயர்ந்து சென்ற 152 சிங்கள குடும்பங்களில் இரு குடும்பங்கள் மட்டுமே மீண்டும் தலைமன்னாரில் குடியேறியுள்ளன

ஆனால் 152 குடும்பங்களுக்கும் மீளக் குடியேறியதற்கான நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றனவாம்

அங்குள்ள சிப்பாய்களும் மேற்படி இரு குடும்பங்களும் நிவாரண உதவியாக வழங்கப்படும் உணவுப் பொருள்களை பெற்று இடம்பெயர்ந்துள்ளவர்களின் இடங்களுக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறார்களாம்.

இருக்கின்ற அகதிகளுக்கு கைவிரிக்கும் அரசு, இல்லாத அகதிகளுக்கு உணவுப் பொருள் வழங்குவதும் ஒரு புதியநீதியா என்று தமிழ் அகதிகள் கேட்கிறார்கள். (உ-5)

ஹரியாணா புதிய தலைநகருக்கு ரூ. 1500 கோடி

பன்சிலால் கூறுகிறார்

சண்டிகார். ஆக.21 ஹரியாணாவிற்கான புதிய தலைநகர் ஒன்றை நிர்மாணிக்க ஆயிரம் முதல் ஆயிரத்தி ஐநூறு கோடி இந்திய ரூபா செலவாகும் என முதல்வர் பன்சிலால் கருத்து வெளியிட்டார்

மத்திய அரசின் செலவில் ஹரியாணா மாநிலத்திற்கான தலைநகர் ஒன்று நிர்மாணம் பெறும். சண்டிகாரை பஞ்சாப்பிற்கு மாற்றும் அதே நேரத்தில் 70 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை ஹரியாணாவிற்கு மாற்றித் தரவும் பிரதமர் ராஜீவ் காந்தி ஒப்புக் கொண்டுள்ளார்

இவ்வாறு ஹரியாணா முதல்வர் பன்சிலால் மேலும் தெரிவித்தார்.

பலகாலமாக தீர்வு காணப்படாமல் இழுபட்டுவரும் பஞ்சாப்-ஹரியாணா ஒப்பந்தங்கள் இதன் மூலம் ஒரு புதிய திருப்பத்தை அடையும் என பஞ்சாப் மாநில முதல்வர் பர்னாலா தெரிவித்தார்.

நீதிபதி தேசாய் கமிஷன் அறிக்கைகள் விரைவில் சமர்ப்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளதாக பிரதமரின் அமைச்சரக அதிகாரி கருத்து வெளியிட்டார். (ஒ)

ஆலயங்களுக்கு நிதி உதவி

மதுரை, ஆக 21 மதுரை மாவட்டத்தில் உள்ள வருமானம் இல்லாத 105 ஆலயங்களுக்கு பூஜை செய்ய நிதி வழங்கும் விழா மதுரையில் நடைபெற்றது.

இந்த ஆலயங்களுக்கு மொத்தம் 5 லட்சம் 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

(உ-ஒ)

விசித்திர கோரிக்கை

பொன் ஆக 21 பிலிப்பீன்ஸ் மக்கள் நாய்களில் விருப்பமுடையவர்களே தவிர நாய்களைத் தின்பவர்கள் அல்லர் என நிரூபிக்குமாறு மேற்கு ஜெர்மனியில் உள்ள பிலிப்பீன்ஸ் தூதரகத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

பிலிப்பீன்ஸ் மக்கள் நாய் இறைச்சியில் விருப்பமுடையவர்கள் என்பதால் அந்நாட்டுப் பொருள்களை நிராகரிக்க வேண்டும் என மேற்கு ஜெர்மனியில் ஒரு குழு எச்சரித்ததை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது

(உ-ஒ)

முன்னாள் பிரதமர் மக்மிலன்மீது குற்றச்சாட்டு

லண்டன், ஆக.21 பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ஹரல்ட்மக்மிலனை யுத்தகால குற்றவாளி எனக் குறிப்பிட்ட பத்திரிகையொன்று கடைகளில் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஹரல்ட் மக்மிலன் சுமார் 40 ஆயிரம்போராளிகளை ரஷ்யாவிடம் ஒப்படைத்ததாகவும் 2வது உலக மகாயுத்தம் முடிவடைந்தபின்னர் அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்றும் அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது

ஆகவே ஹரல்ட் மக்மிலன் யுத்தகால குற்றவாளி என மேலும் அப்பத்திரிகை தெரிவித்திருந்தது. (ஒ)

வெளி உலகில்

லொங்கோவாள் நினைவு அஞ்சலி

பஞ்சாபில் சமாதான ஒப்பந்தத்தை பிரதமர் ராஜீவ் காந்தியுடன் மேற்கொண்டதற்காக தீவிரவாதிகளினால் கொல்லப்பட்ட சீக்கிய தலைவர் அர்ஜுன்சிங் லொங்கோவாலின் முதலாவது நினைவுதினத்தில் சுமார் 40 ஆயிரம் மக்கள் நினைவு அஞ்சலி செலுத்தினர்.

நியூஸிலாந்து விஜயம்

சீனாவின் பிரதிப் பிரதமர் வன் லீ அடுத்த மாதம் நியூஸிலாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் செய்வார் என சீனா அறிவித்தது

ராணுவ நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு

ஈக்குவட்டர்கினிஎன்ற ஆபிரிக்க நாட்டில் கடந்தமாதம் ஜனாதிபதியின் ஆட்சியை புரட்சி சதி மூலம் கவிழ்க்க திட்டமிட்டவர்களுக்கு ராணுவ நீதிமன்றம் மரணதண்டனை வழங்கியது இதில் அமைச்சர்களும் ராணுவ அதிகாரிகளும் அடங்குவர்.

கோடீஸ்வரியிடம் 1 கோடி டாலர் திருட்டு

அமெரிக்காவில் 64வயதுடைய கரோலின் ஸ்ரெடி என்ற கோடீஸ்வரியிடம் இளைஞன்கத்தியைக் காட்டி 1 கோடி டாலர் பெறுமதியான இரத்தினக் கற்களைக் கொள்ளையடித்துள்ளான். கடந்த 10 வருடங்களில் இதே பாணியில் நான்கு தடவை கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

ரகசியங்களை திருடவில்லை:

அமெ. குற்றச்சாட்டுக்கு இஸ்ரவேல் மறுப்பு

டெல்அவிவ், ஆக 21 அமெரிக்காவின் தொழில் நுட்பரகசியங்களைத் திருடுவதற்கு இஸ்ரவேல் திட்டமிடவில்லை.

இஸ்ரவேலின் பாதுகாப்பு அமைச்சரக அதிகாரி ஒருவர் இந்த மறுப்பை ஜெருசலத்தில் வெளியிட்டார்.

இஸ்ரவேலுடன் வர்த்தகத் தொடர்புகளை கொண்டுள்ள நிறுவனமொன்று திட்டமிட்டே தமது தொழில் நுட்ப ரகசியங்களை திருடமுற்பட்டதாக பொய்யான தகவல்களை வெளியிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்கா இஸ்ரவேலுக்கு விற்கவிருக்கும் 4 கோடி 60 லட்சம் டாலர் பெறுமதியான விமானமொன்று பல மைல்களுக்கு அப்பால் பறந்து கொண்டிருந்தாலும் ஒருநாட்டின் ரகசியங்களை ஆகாயத்திலிருந்தே படம் பிடிக்கக் கூடிய சக்திவாய்ந்ததாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

இதை பயன்படுத்தி அமெரிக்காவின் ரகசியங்களைக் கண்டறிய இஸ்ரவேல் முற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டதை தொடர்ந்து ஏற்பட்ட தகராறால் விமானம் வாங்கும் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டது

(ஒ)

கொரில்லாவின் ஜோடிக்காக பாம்புடன் வாழும் மனிதன்

கேப்டவுன், ஆகஸ்ட் 21 ஆண் கொரில்லா குரங்கு ஒன்றிற்கு துணையைத் தேடிக் கொடுப்பதற்காக தென் ஆபிரிக்காவிலுள்ள இளைஞன் 36 நச்சுப்பாம்புகளுடன் 100 நாட்களுக்கு கண்ணாடிப் பெட்டியில் தங்கியிருக்கப் போவதாக அறிவித்துள்ளான்.

ஜோஹனஸ்பேர்க்கில் உள்ள மிருகக் காட்சிச்சாலை ஒன்றில் கடந்த 39 தினங்களாக பாம்புகளுடன் வசிக்கும் ஆஸ்டின் ஸ்டீபன் என்பவன் இந்த மிருகக் காட்சிச் சாலையில் உள்ள ஆண் கொரில்லா ஒன்றிற்கு பெண் கொரில்லாவை வாங்குவதற்காக 80 ஆயிரம் டாலரைச் சேமிப்பதற்காகவே இந்த விஷப்பரீட்சையில் இறங்கியுள்ளான்.

விஷப்பாம்புகளுடன் இன்னமும் 61 நாட்களுக்கு இருந்தால்தான் ஸ்டீபனால் புதிய சாதனையை உருவாக்க முடியும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் 55 நாட்கள் பாம்புகளுடன் கண்ணாடிப் பெட்டிக்குள் சீவித்தவர் ஸ்டீபன். (ஒ)

மேத்தாவிற்கு பாரதிதாசன் விருது

சென்னை, ஆக.21 1986ஆம் ஆண்டிற்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் மு. மேத்தாவிற்கு வழங்கப்படும்.

ஏராளமான கவிதைகளையும் காவியங்களையும் கதை கட்டுரைகளையும் எழுதியுள்ள மு. மேத்தா, புதுக்கவிதை துறையின் முன்னோடியாவார்.

தமிழ் மாநில அரசின் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் இவருக்கு 10 ஆயிரம் ரூபா ரொக்கமும் 4 சவரன் பதக்கமும் பாவேந்தர் பாரதிதாசன் விருதாக வழங்கப்படும். (ஒ)

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

நல்லூரான் வேலாயுதத்திற்கு மேலான ஆயுதம் எதுவுமில்லை

சி. பரமேஸ்வரி

ஞானவேல் தாங்கி வள்ளி, தெய்வயானை என்ற இரு சக்திகள் இருபக்கம் இருக்க காட்சி தரும் முருகனின் எழிற் கோலம் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும்.

இக் காட்சி எமக்கு அரிய பெரிய தத்துவத்தை உணர்த்துகின்றது. வள்ளியம்மை இச்சா சக்தியையும், தெய்வயானை கிரியா சக்தியையும், வேல் ஞான சக்தியையும் குறிக்க, முருகன் அம்மூவகைச் சக்திகளையும் ஆளும் முதல்வராகக் காட்சிதருகின்றான்

வேல் அஞ்ஞானத்தைப் போக்கியருளி ஞானத்தையும், தெய்வயானை வைதிக கர்மானுஷ்டானங்களைப் பேணும் அடியார்களின் பிரதிநிதியாகவும், வள்ளியம்மை சடங்குகளற்ற சுத்த சமரச பக்தி மார்க்கத்தினரின் பிரதிநிதியாகவும் விளங்குகிறார்கள் எனலாம்.

முருகன் ஞானத்தின் வடிவான வேலைக் கரத்திற் கொண்டு ஞான சரணாகவும் உள்ளான். சரம் வழங்குவதைக் குறிக்கும் உயிர்களுக்கு ஞானத்தை வழங்குபவன் முருகனேயாவன். ஞானத்தின் உருவமான வேலை எப்போதும் தனது திருக்கரத்திற் கொண்டிருப்பது முருகன் எப்போதும் ஞானத்தை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றான் என்பதன் அறிகுறியாகும். வேல்பராசக்தியின் வடிவம் 'வேலாயுதத்தின் வடிவடிவாய் பராசக்தி' என்பதனால் இதனை அறியலாம்.

ஞானத்தின் புறத்தோற்றம் செந்நிறமாகும் எனவே முருகன் செந்நிறமுடையவன். அவனுடைய உறுப்பு, கருவி முதலியன எல்லாம் அப்படியே. பரம்பொருளே சிறப்[illegible] செம்பொருளாகிறது. 'சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்றார் வள்ளுவர். செவ்வானிற் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கத்தின் சேய் செஞ்சுடர் வேல் புனைந்து செம்மையாகவே காணப்படுகின்றான். அவன் நம்மை செம்மையேயாய சிவபதம் சேர்த்தருளுவான் வேற்படை முருகன் ஒருவனுக்கே சொந்தம். அது தனித்துவமுடையது.

முருகனின் நிறமும், எழில் நலமும், மாறாஇளமையும் கண்ணைக்கவரும் அவனது ஆற்றலும், எளிமையும் அருளும் கருத்தைக் கொள்ளை கொள்ளும். யாவரையும் உருகுமாறு செய்யும் முருகனின் ஆற்றலின் உருவமாக விளங்குவது வேலாயுதம்.

ஆயுதம் என்றால் அதன் ஆற்றல் எல்லையற்றதாய், எதனையும் அயிர்ப்பின்றி எழிதில் அழிக்க வல்லதாய் அமைந்திருக்க வேண்டும். வேல் எதனையும் விளையாட்டாகவே செய்துமுடிக்கும் ஒப்பற்ற ஆற்றலுடையது. வீரவேல், தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீரவேல். வாரிகுளித்த வேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல் அது.

வேல் ஞானமே உருவானது. ஞானத்தைச் சிவனடியார்கள் திருவருள் என்பர். வடமொழியில் சித்சக்தி என்பர். சாத்திரத்தில் அறிவு, ஞானக்கண் என்பர். தோத்திரத்தில் செஞ்சுடர் என்பர். முருகனடியார்கள் அதனை அறிவு, ஞானச்சுடர் வடிவான், சக்திவாள், வேல் என்பர். திருவள்ளுவர் வேலை அறிவு என்னும் கருவி என்கின்றார். 'அறியாமை [illegible] அறிவுதனை [illegible] கண்டார் அருள்நந்தி சிவம். 'ஞானக்கண்' என்றார் மெய்கண்டதேவர். 'நவமாய செஞ்சுடர்' என்றார் மணிவாசகர். 'அயில் உணவாள்' என்றார் திருமூலர்.

வேல் ஒருபோதும் தீங்கு செய்யாது சூரனுடைய ஆணவத்தை அழித்து அவனுக்கு அருள வேண்டுமென்பதே அதன்குறிக்கோள். உண்மையில் அருள்வதே அதன் தன்மையாகும். வேல் உடலை அழிக்காமல் உயிருள் ஊடுருவிக் கலந்து அதன் அறியாமையை மட்டும் அழிக்கும் ஞான ஆயுதமாகும் இதனால் வேலாயுதத்திற்கு மேலாயுதமெள்ள வேறில்லை எனலாம்.

வேல் அந்தந்த உயிரின் தனிப்பட்ட பக்குவத்திற்கேற்ப செயல்படுகின்றது என்பதைப் புராணமே புகட்டும். வீரவாகு தேவர் நன்னீர் கடலில் மயங்கிக் கிடந்த போது வேல் அவரை நோக்கிச் செல்ல அதனை அவர் வெகு தூரத்திற் கண்டபோதே அவரது மயக்கம் தீர்ந்தது சிங்கமுகாசுரன் குணசீலன் வேலின் பெருமையை நன்குணர்ந்தவன். உதவுக்காகவும் கடமைக்காகவும் ஞானத்தைத் துறந்தான். எனவே வேலின் தரிசனமே தாக்குதலுக்கு நிகராயிற்று. சூரனை ஒருமுறை வேல் தாக்கிற்று. அவன் மீண்டும் சுபருபத்துடன் தருகின்றவதை அறிந்து மீண்டும் ஒருமுறை தாக்கிற்று வேல் வெறும் ஆயுதம் அன்று நன்னீர் கடலிலுள்ளும் விடுவிட்ட வீரவாகு தேவருடன் பேசி அருளிய தெய்வம் அது. எனவே யாவரும் வேலை வணங்குவதையே வேலையாகக் கொண்டால் கவலை தீரும்.

வேல் மெய்யுணர்வு அருள்வது. நெஞ்சக்கன [illegible] யாக்குவது. [illegible] ருந்தாய் ஆருயிர்க்கு அருந்துணையாய் இருப்பது.

அந்த வேலே எமது வினை தீர்க்கும்.

அது நல்லூர் மூலஸ்தானத்தில் அமைந்து ஒளி உமிழ்கின்றது. அதனை வேண்டித்தொழுவோம். நமது துன்பத்தை தாண்டித் தலைமை பெறுவோம். மயில் மீது மயிலாசனரும் அயில் வேல் அரசன் எமது இகல் நீக்குவான் ★

பொய்யாமொழி

குறள்:

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

பொருள்:

தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழைப் பெறாவிட்டால் உலகத்தார் எல்லார்க்கும் அத்தகைய வாழ்க்கை பழி என்று சொல்வர்.

இன்னும் பாட வேண்டும் என்று பேரார்வம் கொண்ட அருணகிரியார்

யாழ்ப்பாணம், ஆக. 21 பதினாயிரம் திருப்புகழ் பாடிய அருணகிரியார் இன்னும் பாடவேண்டும் என்று பேரார்வம் கொண்டார்.

இப்படி ஆத்மஜோதி நா. முத்தையா நல்லை ஆதீனத்தில் நேற்று முன்தினம் 'அருணகிரிநாதரின் ஆசை' என்னும் பொருள் பற்றி அருளுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

''ஆசைப்பட்ட ஆய் வரும் துன்பம் ஆசை விடவிட ஆனந்தமாமே'' — என்று சொந்த அனுபவத்தை பெரியோர் கூறினர். பிறவிக்கு காரணம் ஆசை. அற்றது பற்றெனில் உற்றது வீடு. இது உலக ஆசை பற்றியது. ஆனால் அருணகிரியார் கொண்ட ஆசை இறைவனைப்பாட வேண்டும் என்பது.

பதினாயிரம் திருப்புகழ் பாடிய அருணகிரியார் இன்னும் பாடவேண்டும் என்று பேராசை.

மாணிக்கவாசக சுவாமி ''ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே'' — என்று கூறினர்.

மனமாகிய தாமரையைக் குஞ்சமாக வைத்து சொல் மலர்களை அன்பு என்னும் நாரால் அழகாகத் தொடுக்க அதில் ஞானமாகிய மணம் வீசும்.

ஞானத்தைப் பெரியோர் உள்ளம் என்னும் வண்டுகள் நாடும். அப்படி ஒரு மாலையை உன் பவனம் போகின்ற அழகிய திருவடிகளுக்கு சாத்தி நான் மகிழவேண்டும் என்று அருணகிரிநாத சுவாமிகள் ஆசைப்பட்டார் ''பாடும் பணியே பணியாய் அருள்வாய்''- என்பது அவர் வாக்கு.

''பாடவேண்டும் நான் போற்றி நின்னையே பாடி நைந்து, நைந்து உருகி நெக்கு, நெக்கு ஆடவேண்டும் நான் போற்றி''— என்பது மணிவாசகர் கூற்று.

பற்று அற்றவன் ஆண்டவன் ஒருவரே. அவருடைய பற்று, இவவடிப் பற்று. அது ஏனைய பற்றுக்களை நீக்கிவிடும்.

இப்படி ஆத்மஜோதி முத்தையா தெரிவித்தார். (இ-எ)

சுன்னாகத்தில் நாளை ஈழவர் எழுச்சி விழா

சுன்னாகம், ஆக 22 சுன்னாகத்தில் ஈழவர் எழுச்சி விழா கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது.

நாளை சனிக்கிழமை மயிலணி சைவ மகா வித்தியாலயத்துச் சுகாலையில் நடைபெறும் விழாவில் பி.ப. 1.00 மணிக்கு மெய்வல்லுனர் போட்டிகள் நடைபெறும்.

மாலை 5.00 மணிக்கு திரு. க. செல்வநாயகம் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

'வடக்கு, கிழக்கு இணைப்பு மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீருமா? தீராதா?— என்ற பட்டிமன்றம் இடம்பெறுகிறது.

கவியரங்கம், கிராமிய நடனம், தெல்லிப்பழை ஈழவர் முன்னணியினரின் வில்லிசையும் விழாவில் இடம்பெறுகிறது.

மயிலணி ஈழவர் முன்னணியின் ''இங்கு நடப்பதென்ன?'' தெல்லிப்பழை ஈழவர் முன்னணியின் ''ஈழத்துக்கு முன்'' ஆகிய இரு நாடகங்கள் இலவசமாக மேடையேறுகின்றன.

எழுச்சி விழாவில் தமிழ் மொழி கலாசாரப் பாரம்பரியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (உ-27)

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்,
நல்லவர்கள்
ரெலிகுளோப்!
ஆர் ஜி. கட்டடம், ஸ்ரான்லி வீதி.
யாழ்நகர்.

உதயன்

22-08-1986 வெள்ளிக்கிழமை

யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088-பத்து சமாந்தர லைன்கள்

கதிர்காமம் ஆலயப் பகுதியில் துப்பாக்கிக் கோஷ்டி தாக்குதல்

சிங்களக் குடும்பங்கள் இடம் பெயர்வு

கொழும்பு, ஆகஸ்ட் 22

கதிர்காமம், கதிர்மலையில் உள்ள ஆலயத்துக்குச் சென்ற ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரிமாத்தையா என்பவர் உயிரிழந்தார்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கதிர்காமம் பிரதேசத்தில் உள்ள கோதாமிகம, செலிஈற, நாகவீதிய ஆகிய சிறு கிராமங்களைச் சேர்ந்த 150 சிங்களக் குடும்பங்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியேறிவிட்டனர்

பொத்துவிலில் இருந்து உகந்தை வழியாக வந்த ஆயுதந்தாங்கிய கோஷ்டி ஒன்றே இச் செயலில் ஈடுபட்டிருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கோஷ்டி வரும் வழியில் டிராக்டர் ஒன்றைக் களவாடியது என்றும் பின்னர் கூலாசப் பயணஜீப் ஒன்றை அதன் சாரதியுடன் கடத்திச் சென்றது என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

'இக் கோஷ்டிக்குத் தலைமை வகிப்பவர் கிருஷ்ணா என்ற பெயர் கொண்டவர். இவர் கதிர்காமத்தில் பிறந்தவர்'' — இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன

இக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் கமாண்டோக்களின் சீருடைகளை அணிந்து இருந்தனர் என்று, கதிர்காமம் சென்று வந்தவர்கள் கூறினர்.

இப் பகுதிக்கு 100 பேர் கொண்ட பொலீஸ்படை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (ட-எ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பட்டமளிப்பு விழா

ஆகஸ்ட் 31
1986

1986ஆம் ஆண்டு ஆகஸ்ட் 30ஆம் நாள் கைலாசபதி கலையரங்கத்தில் இரு அமர்வுகளில் பட்டமளிப்புவிழா நடைபெறும்

அமர்வு 1:
கலைப்பீடம்
பி. ப 2 00 மணிக்கு

அமர்வு 2:
விஞ்ஞான பீடமும்
மருத்துவ பீடமும்
பி. ப, 4-00 மணிக்கு

அனுமதி வழங்குதல்

பட்டமளிப்பில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபை அறையில் 1986 ஆகஸ்ட் 27, 28, 29 ஆகிய திகதிகளில் காலை 8-30 மணி முதல் நண்பகல் 12 00 மணி வரை அங்கிகள் வழங்கப்படும். அங்கிகளைப் பெறவரும் பொழுது மாணவர்கள் தமது மாணவப் பதிவுப் புத்தகத்தை அல்லது அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

நிழற்படம்

பட்டமளிப்பிற் சமுகமளித்துப் பட்டங்களைப் பெற விரும்பும் மாணவர்கள் வரும் நிழற்படப் பிரதி ஒன்றிற்கு ரூபா 12-00 செலுத்திய பற்றுச்சீட்டினையும் அங்கிகளைப் பெற வரும்பொழுது சமர்ப்பிக்க வேண்டும்,

அனுமதிச்சீட்டு

அங்கிகளைப் பெறும் மாணவரொவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருந்தினர் அனுமதிச்சீட்டு வழங்கப்படும்,

பதிவாளர்

பலாலியில் சார்ஜண்ட் நல்லதம்பி

கொழும்பு, ஆக. 22

நீல் டி சில்வா நடத்தும் ''சார்ஜண்ட் நல்லதம்பி'' என்ற நாடகம் பலாலி இராணுவ முகாமில் இரண்டு தடவை மேடையேற்றப்பட்டது

கொழும்பில் இருந்தே விமானம் மூலம் நடிகர், நடிகைகள் பலாலிக்கு அழைத்து வரப்பட்டனர் (உ-ஐ-எ)

பிறந்த நாள் வாழ்த்து

Dr. N. தவராஜா ஞானமலர் அவர்களின் செல்ல செல்வம் கார்த்திக்கா தனது மூன்றுவது பிறந்த தினத்தை இன்று 22-8-86ல் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். ஆச்சி ஐயரை அம்மா, அப்பா கணபதி அருள் பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.

[illegible]

இன்று
மங்களகரமான திறப்பு விழா
மிது 'வீடியோ மூவிஸ்
MITHU V'DEO MOVIES
பிரதான வீதி, சித்தன்கேணி
என்னும் ஸ்தாபனம் இன்று 9-30க்கும் 10-30க்கும் இடைப்பட்ட சுபநேரத்தில் வீடியோ பிரசாத் உரிமையாளர் திரு இராமநாதன் அவர்களால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படும் எங்களிடம்!
புதிய, பழைய, ஒரிஜினல் வீடியோ படப்பிரதிகளும், மற்றும் சகல விதமான பாதணிகளும், பாடசாலை உபகரணங்கள் முதலியனவும்
சிறந்த முறையில்,
வீடியோ படப்பிடிப்பும்
வீடியோ பிரதி பண்ணல்(COPYING)
போன்றசேவைகளும் செய்து கொடுக்கப்படும்
எமது இன்கறப வெளியீடு
* உனக்காக வாழ்கிறேன்
மோகன் — நதியா
* வேட்டைப் புலி
முக்கிய குறிப்பு:
சிறப்பு விழாவை முன்னிட்டு 22-ஆந் திகதி முதல் 25-ஆந் திகதி வரை வீடியோ பிரதி ஒன்றுக்கு 5/- (ஐந்து ரூபா) அறவிடப்படும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

புதனன்று

பருத்தித்துறையில் நடந்த தாக்குதலில் வீடுகள் சேதம்

பருத்தித்துறை, ஆக. 22

புதன்கிழமை பருத்தித்துறையில் இடம்பெற்ற கடற்படை பீரங்கித் தாக்குதலில் தும்பளை மணல் பகுதியில் சில வீடுகளும் பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருப் பகுதியில் சில வீடுகளும், மதில்களும் சேதமடைந்தன.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

புதன்கிழமை காலை பருத்தித்துறைக் கடலில் ஆறு ரோந்து விசைப் படகுகளும் பெரிய பீரங்கிக் கப்பல் ஒன்றும் வந்து நங்கூரமிட்டு நின்றன

பீரங்கிக் கப்பலில் இருந்து முதலில் சிறிய பிளாஸ்டிக் படகு மூலம் பெட்டிகளும், பொதிகளும், ஆயுதங்களும், உணவுப் பொருள்களும் இறக்கப்பட்டன

போராளிகள் ரொக்கட் லோஞ்சர், நவீன பீரங்கிகள் கொண்டும் முகாம் மீதும் கடற்படைக் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தினர்.

அப்பொழுதே பீரங்கிப் படகில் இருந்து நகரின் பல பகுதிகளையும் நோக்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

ஹெலிக்கொப்டரும் அங்கிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

போராளிகளின் தாக்குதல் தொடர்ந்ததை அடுத்து பிளாஸ்டிக் படகில் ஏற்றப்பட்ட பெட்டிகளும் மற்றும் பொருள்களும் கரைக்குக் கொண்டு வரப்படாமலேயே மீண்டும் கப்பலில் ஏற்றிக் கொண்டு செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-118)

கைதிகள் பட்டினி

பிகாரில் உள்ள சிறைச்சாலையொன்றிற்கு ஒழுங்காக உணவு அனுப்பிவரும் அரசாங்க நிறுவனம் ஒன்று கடந்த வாரம் உணவை அனுப்ப மறுத்ததினால் சுமார் 5 ஆயிரம் கைதிகள் ஒரு வாரமாக பட்டினி கிடக்கின்றனர் சிறைச்சாலை அதிகாரிகள் பழைய பாக்கி செலுத்தாததினாலேயே இந்த நடவடிக்கை

பருத்தித்து--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் நடத்தினர்

எதிர்ப்படையினருடன் நடைபெற்ற சமரின் மக்கள் விடுதலைப் படை வீரர்களான சங்கர் (உடுப்பிட்டி) குமார் (பருத்தித்துறை) ஆகியோர் வீர மரணம் எய்தினர்

மக்களுக்காக மரணித்த எமது தோழர்களின் உடல்களை மீட்டெடுப்பதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளும் எம்மோடு இணைந்து செயற்பட்டனர்.

தாயக விடுதலைக்காக தம்மையே அர்ப்பணித்த போராளிகளின் தியாகங்களை அரை, குறைந்திர்வுகளால் நிரைபமாக்க நாம் அனுமதியோம்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

சம்பவம்.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தும் முன்னேற முயன்ற போது நாம் மிகக் கடுமையான நேரடி மோதலில் ஈடுபட்டோம்.

இறுதியில் சிப்பாய்கள் மிகப்பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கினர்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ)

இன்ஸ்பெக்டர்..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வரை வைக்கப்பட்டிருந்தார். அதன்பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்

என்ன காரணத்துக்காக அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது தெரிவிக்கப்படவில்லை.

இப்படி பனுவில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

காணிப் பிரச்சினை 13 பேர் கொலை

லக்னோ ஆக 21

உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஒரு சீக்கிய குடும்பத்தின் கடைசி மகன் காணித்தகராறு காரணமாக 13 பேரை வாளால் வெட்டிக் கொலை செய்தான்.

போராளிகளு--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளிகள் குழுக்கள் இந்திய அமைச்சர்களிடம் ஐப் திம்புறத் தெரிவித்துவிட்டதாகப் பிரபாகரன் சொன்னார்.

இதேவேளை கொழும்புப் பேச்சுக்களுக்குத் தந்தம் விளைவிக்கும் வகையில் நடந்து கொள்வதில்லை எனப் போராளிகள் குழுக்கள் மத்திய அமைச்சர்களுக்கு உறுதி அளித்ததாகப் பிபிஸி தெரிவித்தது (உ)

அரசிடமிருந்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாகின

அப்போது இந்தஉடன்பாடு ஏற்படாத விஷயம் வெளிவந்தது

காலையில் இரண்டு மணித்தியாலங்களும் மாலையில் இரண்டரை மணித்தியாலங்களும் பேச்சுக்கள் இடம் பெற்றன.

அமைச்சர்கள் காமினி திஸநாயக்கா, லலித் அத்துலத்முதலி, ரொனி டி மெல், கே. டபிள்யு தேவநாயகம், ஜனுப் ஏ சி எஸ் ஹமீத் ஆகியோர் ஜனாதிபதி தலைமையில் அரசுக் குழுவில் பங்குபற்றினர்

கூட்டணிக் குழுவிற்கு திரு. அ அமிர்தலிங்கம் தலைமை வகித்தார்

இப் பேச்சுக்கள் இன்று வெள்ளிக்கிழமையும் தொடர்ந்து நடைபெறலாம் என்று தெரிகிறது. சனி ஞாயிற்றுக்கிழமை பேச்சுக்கள் நடைபெறுது என்றும் —

திங்கட்கிழமை முதல் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம் என்றும் தெரியவருகிறது (ஆ-எ)

ஓர் அன்பின்
வேண்டுகோள்
பேரன்புடைய தமிழ் மக்களே!
புதுவாழ்வு நிலையத்தாகிய நாங்கள் ஆனைக்கோட்டையில் வலுவிழந்தோர்களுக்காக ஒரு இல்லத்தைக் கட்ட முயன்று கொண்டிருக்கிறோம். இந்த அன்புப் பணியில் பொதுமக்களாகிய நீங்களும் பங்கு பெற அன்புடன் அழைக்கிறோம். சிறும் கிறும் இதற்கான பெருந்தனையோ பொதுமக்களாகிய உங்கள் ஒவ்வொரு வீட்டிலுமிருந்து எதிர்பார்க்கிறோம் உங்கள் நன்கொடைகளை— காணிக்கைகளை அனுப்ப வேண்டிய முகவரி.
போதகர் லி. ஜே ஜீவரத்தினம்
புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை

நல்லூர் திருவிழாவில்
உங்கள் பிரிய
'அணில்'
ஐஸ்கிறீம்
Free from Saccharin.
Safe for Children.
80 ml. PLASTIC CUPS Rs. 4/-
Also Cones & Family Blocks
JAFFNA LEOS
ICE CREAM STALL

நீத்தார் பட்டியல்

வேலன் மார்க்கண்டு

கரும்பராய் தெற்கு செல்லபுரத்தைச் சேர்ந்த வேலன் மார்க்கண்டு 20 8 86 அன்று காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும் செகநாதரன் (சவூதிஅரேபியா) வறிவேஸ்வரன் (சிங்கப்பூர்), மகேஸ்வரன், சிவாகரன், அருள்கரன், செகநாதேவி, நற்குணதேவி, மலர்தேவி, வெண்ணிலாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், சந்திரனின் அன்புமாமனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் 23 8 86 காலை 10.00 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு வேம்பன் மயானத்தில் அடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: கோகன்

திருமதி சரஸ்வதி தாமோதரம்பிள்ளை

காசம் சென்ற மல்லாகம் ஓய்வுபெற்ற கிராம அதிகாரி திரு. அ சி தாமோதரம்பிள்ளை J. P. அவர்களின் மனைவியும் திரு சிவசம்பு (அதிபர், மு. ஒட்டு சுட்டான் ம வி.) திரு அகிலேஸ்வரன் பாஸ்கர வரோதயாக் கல்லூரி), அகிலேஸ்வரி, கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு S. அரசரத்தினம் (பென்சனர்) திரு. S. சதாவர்த்தன் (நில அளவையாளர்) திருமதி S. சிவசம்பு (திட்ட அலுவலர்கள் உத்தியோகத்தர், கச்சேரி, முல்லைத் தீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும், வாசுதேவன் (பிரான்ஸ்), முரளிதரன், மீனலோஜனி, யசோதா, இராஞ்சலி, ஹரிணி, சுபா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாகிய திருமதி சரஸ்வதி தாமோதரம்பிள்ளை 21-8-86இல் காலமானார். ஈமைக்கிரியைகள் அன்றே முடிவடைந்தன.

நண்பர்களும் உறவினர்களும் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
திரு தா. சிவசம்பு

விவாக முகூர்த்த அழைப்பிதழ்

உ

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய ஆண்டு ஆவணி மாதம் 7ஆம் திகதி (23-08-1986) சனிக்கிழமை காலை 6 30 மணி முதல் 8-15 வரையுமான சுபமுகூர்த்தத்தில் இணுவில் மஞ்சத்தடி பிள்ளையார் ஆலயத்தில்

எங்கள் புதல்வன் சிரஞ்சீவி பாஸ்கரன் (பாஸ்) (தவில் வித்துவான்) அவர்களுக்கும்	★ ★ ★ ★ ★ ★	எங்கள் ஏக புதல்வி சௌபாக்கியவதி விஜயஸ்ரீ (ஸ்ரீ) அவர்களுக்கும்

நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

திரு. திருமதி எம். இராமையா
(பிரபல நாதஸ்வர வித்துவான்)
கந்தசாமி கோயிலடி,
இணுவில்.

திரு. திருமதி கே. ஆர். சுந்தரமூர்த்தி
(பிரபல நாதஸ்வர வித்துவான்)
இணுவில்.

தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.

அமரர் சண்முகம்
நினைவுக் கட்டுரைப் போட்டி 1986
* * * * *
நாளைய
சஞ்சீவியில்
முடிவுகள்
வெளிவருகின்றன!

அடாது 'ஷெல்' பொழிகிறது!
விடாது 'ரெலிகுளோப்' சேவை நடைபெறுகிறது!

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை [illegible] உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது 22—08—1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., [illegible] Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ/60 N [illegible]